Crl.Misc.40.

**EXAMINATION OF THE ACCUSED**

(Section 274 of BNSS)

– – – – – – –

IN THE COURT OF

Calendar .. ..

Miscellaneous .. .. STC 1241 of 2025

Preliminary Register .. ..

STATEMENT OF ACCUSED

Name : முத்துமாணிக்கம்

Father's Name :

Village :

Taluk :

Caste :

Calling :

Religion :

Age :

Date : 10.02.2026

<u>Questions</u> : இவ்வழக்கின் புகார்தாரர் ராமசாமி ரயில்வேயில் காண்ட்ராக்ட் முறையில் தொழில் செய்து வருவதாகவும், எதிரி முத்துமாணிக்கமாகிய உங்களை 20 வருடங்களாக நன்கு தெரியும் என்றும், அதனடிப்படையில் 20.03.2025 ம் தேதி உங்களது குடும்ப செலவிற்காக வாதியிடம் ரூ.3,00,000/–த்தை கைக்கடனாக பெற்றதாகவும், மேற்படி தொகையினை 3 மாதங்களில் திருப்பி தந்துவிடுவதாக கூறியதாகவும், வாதி மேற்படி கடன் தொகையை உங்களது வீட்டிற்கு வந்து கேட்டதாகவும், எதிரியாகிய நீங்கள் மேற்படி கடன் தொகைக்காக உங்களது வங்கி கணக்குள்ள பெடரல் வங்கி, சாத்தூர் கிளைக்குரிய 19.06.2025 ம் தேதியிட்ட காசோலையை (காசோலை எண்.012642) ரூ.3,00,000/–த்திற்கு வாதியின் பெயருக்கு நிரப்பி கொடுத்ததாகவும், மேற்படி தங்களுடைய காசோலையை வாதி அவருடைய கணக்குள்ள DBS வங்கி லிட், சாத்தூர் கிளையில் வசூலுக்காக 19.06.2025 ம் செலுத்திய போது, அது 20.06.2025 ம் தேதி "Account Closed" என ரிட்டன் மெமோ கொடுக்கப்பட்டதாகவும், 15.07.2025 ம் தேதி எதிரியாகிய உங்களுக்கு மேற்படி காசோலை தொகையை கேட்டு வழக்கறிஞர் அறிவிப்பு அனுப்பியதாகவும், அந்த அறிவிப்பை நீங்கள் பெற்றுக்கொண்டதாகவும், மேற்படி அறிவிப்பை பெற்றுக்கொண்டதற்கான ஒப்புதல் அட்டை 21.07.2025 ம் தேதி கிடைக்கப்பெற்றதாகவும், இது நாள் வரை பணம் தரவில்லை என்பதால் புகார்தாரர் உம்மீது மாற்றுமுறை ஆவண சட்டம் பிரிவு 138 ன் கீழ் வழக்கு தாக்கல் செய்துள்ளாரே, அது பற்றி நீர் கூறும் முகாந்திரம் என்ன? நீர் என்ன குற்றவாளியா? இல்லையா? நீர் என்ன சொல்கிறீர்?

பதில் :

நானும் ராமசாமியும் ரயில்வேயில் SUb–contract எடுத்து சேர்ந்து வேலை செய்து வந்தோம். 2017– 2018 ம் ஆண்டுகளில் நாங்கள் செய்த வேலைக்கு என்னுடைய வங்கி கணக்கில் பணம் வந்தது. ராமசாமி அவரிடம் காசோலை இல்லை என்றும், என்னுடைய வங்கிக் கணக்கில் உள்ள பணத்தை எடுத்து எங்களிடம் வேலை பார்க்கும் நபர்களுக்கு சம்பளம் கொடுப்பதற்கு என்னுடைய காசோலை வேண்டும் என்றும் கூறி, என்னிடம் இருந்து மூன்று காசோலைகளை வாங்கிக் கொண்டார், அந்த காசோலைகளை அவர் பூர்த்தி செய்து, பணம் எடுத்து சம்பளம் கொடுத்து விட்டார் என்று நான் நினைத்தேன். அவரிடம் என்னுடைய காசோலை இருந்தது என்ற விபரம் எனக்கு தெரியாது. நான் அவரிடம் 2025 ஆம் ஆண்டு கடன் எதுவும் வாங்கவில்லை. கடந்த நான்கு ஆண்டுகளாக நான் சீர்காழியில் என்னுடைய குடும்பத்துடன் குடியிருந்து வருகிறேன், அந்த காலகட்டத்தில் சாத்தூருக்கு வந்தது கிடையாது.

இந்த வழக்கில் தாக்கல் செய்யப்பட்டுள்ள காசோலை என்னுடைய வங்கி கணக்கிலிருந்து கொடுக்கப்பட்டதுதான், அதில் உள்ள கையெழுத்து என்னுடைய கையெழுத்து தான். ஆனால் நான் அதை ராமசாமியிடம் பூர்த்தி செய்து கொடுக்கவில்லை. நான் வேலை நடக்கக்கூடிய இடத்தில் இருப்பேன் என்பதால் ராமசாமி என்னிடம் கையெழுத்து மட்டும் பெற்று காசோலையை வைத்திருந்தார், வேலை பார்க்கும் நபர்களுக்கு பணத்தை எடுக்கக் கூடிய சூழ்நிலையில் எங்களுக்கு பணம் வர வேண்டிய நிறுவனத்தில் இருந்து எவ்வளவு பணம் வருகிறது என்பதை அவர் அந்த நிறுவனத்திடம் கேட்டு, எங்களுக்கு வரக்கூடிய தொகையை காசோலையில் பூர்த்தி செய்து அதை எடுத்துக் கொள்வார். ஆகையால், நான் ராமசாமியிடம் பூர்த்தி செய்யாத கொடுத்த காசோலையை அவர் பூர்த்தி செய்து இந்த வழக்கில் தாக்கல் செய்துள்ளார்.

மேற்படி கேள்வி என்னால் நேரடியாக எதிரியிடம் கேட்கப்பட்டு, அவர் கூறிய பதில்கள் என்னால் நேரடியாக கணினியில் தட்டச்சு செய்யப்பட்டது.

நீதித்துறை நடுவர் எண்.2,

சாத்தூர்.